# ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் - அடியேனுடைய அனுபவங்கள்

சோகத்தூர் ராமானுஜ தாஸன்

सर्वतन्त्रेषु निष्णाता रङ्गरामानुजाह्वयाः । दयन्तां सम्प्रदायस्य धूर्वहा गुणभूषणाः ॥

அடியேன் முதன்முதலாக ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனை தெண்டன் ஸமர்ப்பித்தது 1988ம் ஆண்டு, ஸ்ரீரங்கம் தஶாவதார ஸந்நிதியில் முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் திருநக்ஷத்-ரத்தன்று. அப்பொழுது ஸ்ரீமதாண்டவனின் பூர்வாஶ்ரமம். ஏதோ காரணத்தால் ஸ்ரீமாலோல வித்வத் ஸதஸ்ஸுக்கு முந்திய நாட்களில் எழுந்தருள முடியாமல் ஸ்ரீமதழகியசிங்கரின் திருந-க்ஷத்திர தினத்தன்று ஸ்ரீமதழகியசிங்கரின் ஆஶ்ரமத்துக்கு எழுந்தருளி இருந்தார். ஸ்ரீமதழகிய-சிங்கர், புன்சிரிப்புடன் முதலில் வரமுடியாமல் போனதால் தவறில்லை, ஸதஸ் நடக்கும்போது வந்திருந்தால் இன்ன விஷயம் சொல்லவேண்டுமென்று நினைத்திருந்தால் அதை இப்பொழு-தும் விஜ்ஞாபிக்கலாம், திருநக்ஷத்ரத்தன்று ஸதஸ் கிடையாதென்றில்லை, கேட்க இவர்கள் கூட உள்ளனர் என ஸ்ரீ. உ.வே. மஹாவித்வான் ஒரத்தி ரகுநந்தனாச்சாரியார் ஸ்வாமி, அவர் குமாரர் ஸ்ரீநிவாஸாச்சாரியர், அடியேன் முதலியோரைக் காட்டி ஸாதித்தார்.

ஸ்ரீமதாண்டவனும் ஸ்ரீபாஷ்யத்தில் ப்ரதானாதிகரணத்தில் உள்ள த்ரிதாத்விஷ்டி, த்ரைதாதவீயேஷ்டி முதலிய விசாரத்தை வெகு நேர்த்தியாக ஶ்ரீமதழகியசிங்கர் உகக்குமாறு விஜ்ஞாபித்தார். அடியோங்களும் தைத்திரீய ஸம்ஹிதா விஷயவாக்யாதிகளை பராமர்சித்-தோம். அப்பொழுது நேர்ந்த ப்ரதமஸமாகமம் விரைவிலேயே ஸ்ரீமதாண்டவன் துரீயாஶ்ரம ஸ்வீகாரம் செய்து கொண்ட பிறகு பலமுறைகள் அன்னாரின் அனுக்ரஹத்தைப் பெற வழி வகுத்தது.

திருப்பதியில் ஒருமுறை 'ஸம்ஸ்க்ருதமும் கம்ப்யூட்டரும்' என்ற தலைப்பில் அடியேன் செய்திருந்த சிறுமுயற்சி வியப்பளிப்பதாகவும், கம்ப்யூட்டரில் ஸம்ஸ்க்ருதத்தைப் பயன்படுத்த முடியுமா என வினவி, அடியேனின் 'ஶாப்தபோத'த்தைப் பற்றிய கம்ப்யூட்டர் செயல் முறையைக் கூர்ந்து கவனித்தருளினார்.

பின்னர் பெங்களூரில் ஸ்ரீபுரத்திலுள்ள ஆஶ்ரமத்திலும் அடியேன் கம்ப்யூட்டரில் ஸம்ஸ்க்ருதம் விஷயமாக செய்திருந்த ஆராய்ச்சியைப் பற்றி எல்லோரும் அறியும் பொருட்டு, ஒரு அவகாஶத்தை ஏற்படுத்தி, ஊக்குவித்து, வேத, ஶாஸ்த்ரங்கள் விஷயமாகப் பல அரிய கருத்துக்களை அருளிச்செய்து, அதிலும் ஸ்மார்த்த, வைஷ்ணவ பாடபேதங்கள் விஷயமாக வேதஸ்வரங்களின் மாற்றத்தால் ஏற்படும் பொருளில் மாற்றங்களையும் விவரமாக விளக்கச் சொல்லி செவி சாய்த்து அனுக்ரஹித்தார். பஹுஶ்ருதர்களான, பல துறைகளில் அஸாதாரணமான புலமை உள்ள ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் போன்றவர்களால் தான் இளைய தலைமுறையினருக்கு ஸம்ப்ரதாயத்தில் ஊற்றம், அறிவாற்றல் மற்றும் அனுஷ்டானம் கைகூடும் என்பதில் எள்ள்ளவும் ஐயமில்லை.

2005ம் வருடம் சென்னையில் எழுந்தருளியிருந்த பொழுது ஒருமுறை மிகவும் சிற்ற-றிவினனாகிய அடியேனையும் ஶாஸ்த்ர ரத்னாகர என்னும் விருதை அளித்து ஸம்மானித்தது ஸ்ரீமதாண்டவனின் பரந்த மனப்பான்மையையும் ஸம்ப்ரதாயஜ்ஞானத்தை வளர்ப்பதில் உள்ள ஊற்றத்தையும் காட்டுகிறது. பூர்வஸுக்ருதத்தாலும் ஆசார்யானுக்ரஹத்தாலும் மட்டுமே இந்த

பாக்கியம் கிடைத்தது. இதைத் தவிர, சில வாக்யார்த்த ஸதஸ்களில் அடியேனை விஷய பரீக்ஷை, ஶோதனம் முதலியவற்றால் அனுக்ரஹித்துள்ளார்.

இவ்வாறு ஸமீபகாலத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீதேஶிகஸம்ப்ரதாய ஆசார்யர்களில் தலை சிறந்தவரான இந்த ஆசார்யரின் இழப்பால் வருந்தும் பொழுது அவர் நம்முடன் எழுந்தருளிய காலத்தில் பெற்ற அருளாசிகளை நினைத்துத் தேறியிருக்கலாம்.

शोकहर्तृपुरीयश्रीरामानुजसुधीरिदम् । व्यलेखीद्विदुषां प्रीत्यै महनीयगुणेरितः ॥

ஶுபமஸ்து.